
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1302

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




கோவி.லெனின்

125

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# எதிர்க்கட்சிகளின் கேள்விகள், அடாவடி அமைச்சர்கள்!

***‘சட்டமன்றத்தில் தி.மு.க.வின் மிரட்டல்களுக்கு, த.வெ.க. அஞ்சாது’ என்றும், ‘தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அடிக்கப் பாய்கிறார்கள்’ என்றும் அமைச்சர் ஒருவர் குற்றம்சாட்டிப் பேசியிருக்கிறாரே?***

*தி.மு.க.எம்.எல்.ஏக்களின் நியாயமான எதிர்ப்புணர்வை எதிர்கொள்ள முடியாமல், த.வெ.க. அமைச்சர் இத்தகைய குற்றச்சாட்டை வைக்கிறார். 1989-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் நாள், சட்டமன்றத்தில் முதலமைச்சர் கலைஞர் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவின் ஏவலால், கலைஞரின் கையிலிருந்த பட்ஜெட் பேப்பர்களைப் பறித்து, கலைஞரின் முகத்தில் குத்தி, அவரது கருப்புக்கண்ணாடி கீழே விழும்படி செய்தவர், அப்போதைய ஜெ.அணி எம்.எல்.ஏ. செங்கோட்டையன். இப்போது, அவர்தான் த.வெ.க.வின் அமைச்சராகவும் சட்டமன்றத்தில் அவை முன்னவராகவும் இருக்கிறார்.*

*அவரது அருகிலிருந்து செயல்படும் த.வெ.க. அமைச்சர்கள், பொய்யான குற்றச்சாட்டுகளையும் அவதூறுகளையும் பேசும்போது, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று பேரவைத் தலைவரிடம் அழுத்தமாக வலியுறுத்தவேண்டிய தேவை தி.மு.க. உறுப்பினர்களுக்கு உள்ளது. அது, அவர்களுக்கு சட்டமன்ற ஜனநாயகம் வழங்கியுள்ள உரிமையாகும்.*

*த.வெ.க.வின் அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் தி.மு.க. குறித்து வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் வதந்திகளையே பரப்பிவருகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கைது நடவடிக்கை குறித்து, அமைச்சர் நிர்மல்குமார் பேசிய உண்மைக்கு மாறான வார்த்தைகளைப் பேரவைத் தலைவரே அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் நிலை ஏற்பட்டது. அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் பலவற்றையும் பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி, உத்தரவிட்டுள்ளார். பல அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களின் பேச்சுகள் நீக்கப்படுகின்றன. ஆனால், நேரலையில் ஒளிபரப்பாவதால், மக்கள் அதனைப் பார்க்க நேரிடுகிறது. அதுமட்டுமின்றி, ரீல்ஸ்களாக த.வெ.க.வினரால் அந்த அவதூறுகள் தொடர்ந்து பரப்பப்படுகின்றன.*

*அவைக் குறிப்பிலிருந்து நீக்கியவற்றை வெளியிடக் கூடாது என்பது, சட்டமன்ற விதி. மீறி வெளியிட்டால், அவர்கள்மீது உரிமை மீறல் நடவடிக்கையைப் பேரவைத் தலைவர் எடுக்கலாம். 1991-ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில், தி.மு.க. உறுப்பினர் பரிதி.இளம்வழுதி காலையில் பேசிய கருத்தை ‘முரசொலி’ தனது வெளியூர் பதிப்பில் அச்சிட்டுவிட்டது. பரிதி பேசியது குறித்துப் பின்னர் விவாதம் எழுந்ததால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக மாலையில் பேரவைத் தலைவர் அறிவித்தார். அதற்குள் ‘முரசொலி’ வெளியூர்களுக்குச் சென்றுவிட்டது. நீக்கப்பட்டவை, சென்னைப் பதிப்பில் இடம் பெறவில்லை. இருந்தும்கூட, உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டு, சட்டமன்றத்திற்குள் நீதிமன்றக் கூண்டு கொண்டுவரப்பட்டு, அதில் ‘முரசொலி’ செல்வத்தை நிறுத்தி விசாரித்தார், பேரவைத் தலைவர். உண்மையின் பக்கம் நின்று உறுதியுடன் அதனை எதிர்கொண்டார் செல்வம். ‘கூண்டு கண்டேன். குதூகலம் கொண்டேன்’ என்று செல்வத்தைப் பாராட்டி ‘முரசொலி’யில் கடிதம் எழுதினார் கலைஞர்.*

*தற்போதைய சட்டப்பேரவை நடவடிக்கைகளில், அவை மரபுகள் ஆளுங்கட்சியினராலேயே மீறப்படுகின்றன. அவர்கள் பேசுவதுதான் அவைக் குறிப்பிலிருந்து அதிகளவில் நீக்கப்படுகின்றன. ஆனாலும் அவை, வெளியே சமூக வலைதளங்கள் வாயிலாகப் பரப்பப்படுகின்றன. இது குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் உரிய முறையில் பேரவைத் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச்சென்றார். ஆளுங்கட்சியினர் அடங்கவில்லை. அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களும் அடங்கவில்லை. அவர்களை அடக்கும் திறனும் முதலமைச்சருக்கு இல்லை. தி.மு.க.வினர் எதிர்க்கட்சிக்குரிய உரிமையைத்தான் தொடர்ந்து எழுப்புகின்றனர். அதைத் திசைதிருப்பும் வேலைகளை அமைச்சர்களே செய்கிறார்கள். அந்தோ... சட்டமன்ற ஜனநாயகம்!*

**...வினா தொடரும்.**

## பரந்தூர் : குரங்கு கையில் பூமாலை?

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தைக் கைவிடுவதாக த.வெ.க. அரசு அறிவித்த நிலையில், சமூக வலைதளங்கள் எங்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சி, எதிர்காலம் குறித்த ஆதங்கப் பதிவுகளைப் பலரும் எழுதிவருகின்றனர். அரசியல் விமர்சகர் ஆர்.அருள்செல்வன் என்பவரின் பதிவு இது.

“சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் தேவைனு 1999-லேயே தேடல் ஆரம்பிச்சது. பல ஆண்டுகளாக வெவ்வேறு இடங்கள் பரிசீலிக்கப்பட்டும், ஆட்சிமாற்றங்களும் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான சிக்கல்களும் காரணமாகத் திட்டம் தொடர்ந்து தாமதமாகிக்கிட்டே வந்தது.

2007-இல் இடங்கள் அடையாளம் காணப்பட்டன. பல ஆட்சி மாற்றங்களுக்குப் பிறகு, கடைசியில் 2022-இல் பரந்தூர் தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்துதல், ஆய்வுகள் எனப் பல கட்டங்களைக் கடந்துவந்தது.

2025-இல், பரந்தூர் பசுமைவெளி விமான நிலையத் திட்டத்திற்கு மத்திய அரசு கொள்கைரீதியான ஒப்புதலை வழங்கியது. இதனால், திட்டம் நடைமுறைக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்தது. இவ்வளவு ஆண்டுகள் பேசி, ஆய்வு பண்ணி, ஒரு இடத்தைத் தேர்வுபண்ணி, இத்தனை பணிகள் நடந்த பிறகு, 2026-இல் ‘திட்டமே வேண்டாம், வேற இடம் பார்ப்போம்’னு கைவிடுறது சாதாரண விஷயம் இல்ல. இது ஒரு ஏர்போர்ட் (Airport) மட்டுமில்ல... இதைச் சுற்றி வரப்போகும் வேலைவாய்ப்பு, தொழில்வளர்ச்சி, சாலை-போக்குவரத்து வசதிகள், முதலீடுகள் எனப் பல விஷயங்கள் சம்பந்தப்பட்டது.


மக்கள் எதிர்ப்பு இருந்தா அதைச் சரிசெய்யவேண்டியது அரசாங்கத்தின் வேலைதான். ஆனால், ஒரு திட்டத்தை ரத்து செய்வதற்கு முன், இத்தனை வருடங்களாக நடந்த செயல்முறைக்கும், அதனால் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிக்கும் மாற்று என்னன்னு சொல்ல வேண்டாமா? 1999-இல் ஆரம்பிச்ச ஒரு தேடல்... 2022-இல் பரந்தூரை அடைந்தது... 2026-இல் மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்கப்போகிறோமா? குரங்கு கையில் பூமாலை கிடைத்தால்...” என்கிறது அந்தப் பதிவு.

# வலை யோசை



**Sundaram Chinnusamy**

அனைத்து விவசாயிகளுக்கும் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். அப்புறம், 50 ஆயிரம் வரை கடன் பெற்றவர்களுக்குத் தள்ளுபடி என்கிறார்கள். பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு கிராம் தங்கமோதிரம் என்றார்கள். அப்புறம், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் என்று அறிவிக்கிறார்கள். வருடத்திற்கு ஆறு சிலிண்டர்கள் இலவசம் என்றார்கள். இப்ப, மூணு சிலிண்டர்தான் என்கிறார்கள். வாக்குறுதிகளைப் பாதி பாதியாகக் குறைப்பதைப் பார்த்தால், ஆட்சிக் காலத்தையும் 2 1/2 ஆண்டுகள் என்று குறைத்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன்.



**ஷங்கர் ராமசுப்ரமணியன்**

கோடைக்காலத்திலும் எனக்கு 4 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வராத மின்சாரக் கட்டணம், சென்ற முறை ரூ.8,400 வந்து, பேரதிர்ச்சியைக் கொடுத்தது... இந்த முறை 13 ஆயிரம் ரூபாய் போட்டு சாதனை செய்திருக்கிறார்கள்... வீட்டு வாடகையும் மின்கட்டணமும் சம அளவு... ஊழலற்ற அரசு... பணத்தைக் கையாளாத ஆட்சியாளர்கள் போன்ற புகழாரங்களை ஊடகங்கள் பாடிக்கொண்டிருக்கின்றன... நான் மரத்துப்போய் அமர்ந்திருக்கிறேன்.



**James Vasanthan**

மக்களின் பொழுதுபோக்கிற்காகத் தயாரிக்கப்படுகிற திரைப்படங்களில் நடிக்கிற நடிகனுக்கு அடிமையாகி, அவன் படம் வெளியாகும்போது, போஸ்டர் ஒட்டி, கட்-அவுட் வைத்து, பாலாபிஷேகம் செய்து, குடித்துவிட்டு குத்தாட்டம் போடுகிறவனையெல்லாம் சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராகவும் ஆக்கினால், திடீரென சமூக, பொருளாதார, அரசியல் அறிவு வந்துவிடுமா என்ன?

தலைவனுக்கே ஒரு மண்ணும் தெரியாதபோது, இந்தக் கூட்டத்தைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

தமிழ்நாட்டின் அழிவுகாலம் தொடங்கிவிட்டது. இந்த அழிவைச் சரிசெய்யப் பல ஆண்டு காலம் ஆகும். இந்த 100 அறிவற்றவர்களால் ஒரு தலைமுறையின் எதிர்காலமே நாசமாகிறது என்பதைப் பின்னாளில்தான் உணர்வீர்கள்!




## ஃப்ளாஷ்பேக்





கே.மூர்த்தி

### பிறந்தநாளில் வாழ்த்து!

2001-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளின் போது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தேன். அப்போது, வார்டு இளைஞர் அணிச் செயலாளராக இருந்தேன். அதன் பின்னர், படிப்படியாக கழகப் பணிகளில் பல பொறுப்புகள் வகித்துள்ளேன். சென்னை வரும் வாய்ப்புள்ள போதெல்லாம், எனது பிறந்தநாளில் தலைவர் கலைஞர், பேராசிரியர், தளபதி எனத் தலைவர்களிடம் வாழ்த்துப் பெறுவது மனதுக்கு நிறைவளிக்கும்.

**- கே.மூர்த்தி, மாவட்டப் பிரதிநிதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### ஓங்கி உயரட்டும்!

1977-ஆம் ஆண்டு அக்டோபர் 29-ஆம் தேதி, தமிழ்நாட்டிற்கு வருகைதந்த இந்திரா காந்திக்குக் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தை அறிவித்தது கழகம். அதையொட்டி, கலைஞர் வெளியிட்ட அறிக்கையில், “குறிப்பிடப்பட்ட நான்கு இடங்களில் மட்டுமல்ல, இந்திரா காந்தி செல்லுகிற இடங்களிலெல்லாம், கருங்கடலில் அலைகள் எழுந்ததுபோல கருப்புக்கொடிகள் ஓங்கி உயரட்டும். எந்தவொரு இடத்திலும் நாம் கட்டிக்காக்கும் அண்ணா வழியை மறந்திடலாகாது. கண்ணியம் - கட்டுப்பாடு - இரு கண்களென விளங்கட்டும்!

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900